# சமூகச்சிக்கல்களைச் சித்திரப்படுத்தும் ந.நாகராஜன்கவிதைகள்

*முனைவர் சு. செல்வகுமாரன்*
இணைப்பேராசிரியர், தமிழ்உயராய்வு மையம்
அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி

மலர்: 4
இதழ்: 2
மாதம்: அக்டோபர்
வருடம்: 2019
ISSN: 2454-3993

கவிஞனின் ஆழ்மனதில் நிகழும் பேரதிர்வில் உருவாகும் ஆழிப்பேரலையே கவிதை மொழி. கவிதைக்கு வாசகனை தம்வசப்படுத்தும் ஆற்றல் உண்டு. மானுட ஈரத்தை தம்மௌன மொழிகளால் மெல்லக்கசியச் செய்யும் கவிதை, தேவைப்படின் இரத்தத்தையும் கசியச் செய்யும். கவிதையின் இரத்தவாடையில் மானுட அடிமைச்சங்கிலிகளின் கண்ணிகள் நெகிழ்ந்து அவிழ்படும் ஓசையைக் கேட்கமுடியும். கவிமனதில் கன்னல்பட்டு கருக்கொண்ட அனுபவ நிகழ்வு கவிதையாகிறபோது கவியின் மனச் சட்டகத்தைப் பொறுத்துவார்க்கப்படும். கவிதைகள் கவிக்கு கவி வேறுபடுகிறது. அந்தவகையில் கவி ந.நாகராஜனின் காலடியில் 'நழுவுகிறது மணல்' எனும் அவரது இந்த இரண்டாவது தொகுப்பு, தமிழுக்கு கிடைத்த ஒரு புதியவரவாக அமைகிறது. இத்தொகுப்பின் ஒவ்வொரு கவிதையிலும் சமூகத்தின் வேறுபட்ட சிக்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன. அவைகுறித்து விவாதிப்பதாகவே இக்கட்டுரை அமைகிறது.

சங்கக்கவிதையிலிருந்து இன்றுவரையிலும் தமிழ்க் கவிதையானது வெவ்வேறு தளங்களில் தமது குரலை உயர்த்திப் பிடித்திருக்கிறது. குறிப்பாக ஆரம்பத்தில் இயற்கையை, மக்கள் வாழ்வியலை, காதலை, வீரத்தைப்பற்றி பேசிய தமிழ்க்கவிதைகள் சமீபகாலமாக சாதிய, பெண்ணிய, இனவிடுதலை சார்ந்தும் தீவிரமாக குரலெழுப்பியுள்ளதன் மூலம் தமக்கான அங்கிகாரத்தைத் தமிழ் மண்ணில் அடையாளப்படுத்தியுள்ளன. உலக வரலாற்றில் பல தருணங்களில் கவிதை போராட்டத்துக்கான முன்னோடி ஆயுதமாக விளங்கியுள்ளது. எனவேதான் அதிகாரத்தில், ஆளும் இடத்தில் இருப்பவர்கள் கவிஞனை, கவிதையை, கண்டு கலக்கம் கொள்கிறார்கள். ஏன் அழிக்கவும் பார்க்கிறார்கள். இதனையே கவிஞர் நாகராஜன் ஒரு கவிதையில் சுட்டுகின்ற போது கவிதை, சுயத்தைத் தாண்டியதாகப் பிறரின் பறிபோகும், நசுக்கிய உரிமைக்கான விடுதலைக் குரலாக எழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

**என்றைக்கு....**
**உன் (பிறர்) வலியை உணர்ந்து**
**உரைக்கிறதோ அன்றைக்கே**
**கவிஎழுதும் தகுதிபெறும்**
**கவிழ்ந்திருக்கும் என் பேனா.**
**அதுவரையில்....**
**அதுவரையில் உறங்கட்டும்**
**ஆழ்துயிலில் என் பேனா.**

**(கா. ந. மணல் – 55)**

கவிதை போராட்டத்துக்கான ஆயுதம் போலவே அன்பை, அழகை, உணர்வை பரிமாறிக்கொள்கின்ற முத்தங்களாகவும், குவளைகளில் அருந்ததயாராக இருக்கின்ற மதுவின் மென்மையான மயக்கமாகவும், அவிழும் மொட்டின் வாசமாகவும் நம்மிடையே உலாவித் திரிகின்றது. ஆக கவிதை அன்பு, அழகு, வன்மம், எனும் வேறுபட்ட பரிணாமங்களில் தம்மை வெளிப்படுத்துவதையும் நாகராஜன் கவிதையில் நிகழ்த்திக்காட்டுகிறார்.

கவிஞர் ந. நாகராஜன் தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றத்தைச் சேர்ந்த இடது சாரி சிந்தனையாளர். அன்பாலும் அமைதியாலும் தம்மை ஆளநினைப்பவர். ஆனால் இவருக்குள்ளிருந்து வெளிவரும் கவிதை அன்பை மட்டுமே போதிக்கவில்லை. பூவுக்குள் மறைந்திருந்து சீறும் பூநாகம் போல இன்றைய தமிழ்ச்சமூகத்திற்கு நேர்ந்திருக்கின்ற கேடுகளைக் கண்ணுற்று அறச்சீற்றம் கொள்கின்றன. இவரது கவிதைத் தமிழ் நிலத்தில் குறிப்பாக எட்டு வழிச்சாலை எனும் பெரு வழித்திட்டத்தை கருவழியில் சென்று தடுக்க முயற்சிக்கிறது.

**வாழையடி வாழையென வாழுகின்ற பூமியினை**
**வஞ்சகத்தால் பறிப்பது தான் ஞாயமா?**
**நாங்க வாழ்விழந்து சாவதுதான் நீதியா?**
**பாடுபட்டு சேர்த்து வச்ச ஆடுமாடு தோட்டமெலாம்**
**ரோடு போட கேட்பதுதான் ஞாயமா?**
**நாங்க கேடுகெட்டு அழிவதுங்கள் ஆசையா?**
**ஆண்டாண்டு காலமாக அப்பன்பாட்டன் பிள்ளைகளும்**
**ஊனுருகி சேர்த்ததிந்த பூமிடா.**
**எங்க உசுரு இந்த மண்ணுலதான் போகுண்டா.**
**எவனெவனோ வாழுதற்கு எட்டு வழி சாலைகளாம்**
**ஏழைகளுக் கென்னவுண்டு நாட்டிலே**
**எங்க கோவணமும் போகுதிந்த ஆட்சியில்.**

**(கா. ந. மணல் – 60)**

விவசாயி, விவசாயநிலம், விளைச்சல் பொருட்களின் முக்கியத்துவத்தை உணர்த்த விரும்பும் கவிஞர் ஒரு கவிதையில் இவைகளை அழிக்க முற்படுவதன் மூலம் தமிழகத்திற்கு நிகழப்போகும் பேராபத்தை, அறப்போரட்டங்களின் மூலமாக உணர்த்த முயல்கிறார். அதனைச் செவிமடுக்க மறுக்கிற மத்திய மாநில அரசுகள் மீது கோபக்கனல் தெறிக்க குரல் எழுப்புகின்றார்.

மட்டுமல்லாது சமீப காலமாகத் தமிழ்நிலம் மழை பொய்த்துஏரிகள் குளம், குட்டைகள் அரசின் அலட்சியத்தால் தொடர்ந்து தூர்வாரப்படாமையாலும், குடிக்கக் கூட தண்ணீரின்றி படுகின்ற அவலம் ஒரு புறமும், ஹைட்ரோஹார்பன் போன்ற திட்டங்களினால் விவசாய நிலம் அழிக்கப்படுவதோடு இயற்கையே பேரழிவிற்கு உள்ளாக்கப்படுவது இன்னொரு புறம் என நிகழும் ஆபத்தை உணர்ந்து இந்த அரசை, சமூகத்தை தொடர்ந்து கவிதைகள் மூலமாகக் கேள்விக்கு உள்ளாக்குகின்றார்.

**தீ?ராத துன்பத்தை சொல்ல- நான்**
**டெல்லிக்கு வந்தேண்டா ராசா**
**சேதாரமா போச்சு வாழ்வு- கொஞ்சம்**
**செவிகொண்டு என்பாடு கேளு.**
**விவசாயம் பாழாகிப் போனா- நாடு**
**வெளங்குமா யோசிச்சுப் பாரு**
**சவமானான் வெவசாயி நூறு- உன்**
**சர்க்காரு யாருக்கு கூறு?.**

**(கா. ந. மணல் – 7)**

சமூகக்கவிதைகள் நெஞ்சை எளிதில் ஈர்க்கும் வகையில் நாட்டார் இசைநிறைந்த

கவிதையாக இடம்பெறச் செய்திருப்பதும் கவிஞரின் இன்னொரு முகத்தை ஆளுமைத் திறத்தைக் காட்டுவதாய் உள்ளன. போராட்டக் குரலோடு ஒலிக்கின்ற இம்மாதிரியான கவிதைகள் பலவும் இன்றைய மத்திய, மாநில அரசுகளின் பாமர மக்கள் விரோதத் திட்டங்களுக்கு எதிரானதாகவும் அதிகாரத்துக்கு எதிரானதாகவும், இருப்பதைப் பார்க்க முடிகிறது. இக்கவிதைகள் முற்றிலும் இவரை இடது சாரி சிந்தனையாளராக அடையாளப்படுத்து வதை எளிதில் இனங்காண வகை செய்கிறது. ஒரு கவிதையைக் குதம்பைச்சித்தர் பாடலினை கண்ணுற்றவராய்ப் படைப்பதையும் காணமுடிகிறது.

***நித்தமொரு சட்டமிட்டு***
***நிம்மதியை பலிவாங்கும்***
***உத்தமர்கள் ஆட்சியிலே-குதம்பாய்***
***உளக்குமுறல் ஓங்குதடி.***

***வங்கியிலே காசிருந்தும்***
***வரிசையிலே காத்திருந்தும்***
***பொங்கலிடக் காசெடுக்க-குதம்பாய்***
***பொதுஜனமோ தவிக்குதடி.***

***(கா. ந. மணல் – 37)***

களவு, கற்பு ஒழுக்கங்கள் குறித்து பேசியதோடு விதவைத் திருமணத்தின் தேவை குறித்தும், வரதட்சணை கொடுமை, ஆணாதிக்கம், பெண்விடுதலை, ஒடுக்கப்பட்ட பெண்கள், குறித்தெல்லாம் பேசி கடந்து வந்த இந்தியச் சமூகமும் ஏன் தமிழ்ச்சமூகமும்கூட இன்று பச்சைக் குழந்தைகள் மீதான வல்லுறவு குறித்து பேசவேண்டிய அவலச்சூழலுக்கு உள்ளாகி இருப்பதும் பேசப்பட்டுள்ளது. குறிப்பாக சமீபகாலத்தில் ஜம்முகாஷ்மீர் மாநிலம் கத்துவா மாவட்டத்தைச் சேர்ந்த குதிரை மேய்க்கின்ற எட்டு வயது சிறுமி ஆசிபா அப்பகுதியைச் சேர்ந்த ஏழு பேரால் கடத்தப்பட்டு தொடர்ந்து சில நாட்கள் மறைத்து வைத்துக் கற்பழிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் உலகையே உலுக்கியதை அறிவோம். அந்த குழந்தை மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறையை விமர்சனப்படுத்துவதோடு பாலியல் குறித்த எந்த சிந்தனையையும் சிந்திக்கின்ற அளவிற்கு வயதுவராத அக்குழந்தையின் மனநிலை குறித்து இப்படியாக கவிதை மொழிகின்றார்.

ஆசிபா..

***நினைத்தாலே***
***குலை நடுங்குது.***
***நீ சிறுமிதானே?***
***ஆண் என்றால்***
***அப்பா, அண்ணன்***
***என்பதைத் தவிர***
***வேறு உறவுகள் புரியாத***
***பேதைதானே?***
***எட்டு வயதில்***
***உன் உருவத்தில்***
***எங்கே தெரிந்தது***
***காமத்தின் கோடுகள்?***

***(கா. ந. மணல் – 2)***

இத்தோடு கடந்தகால நீதி சார் தொன்மங்களையும் அடையாளப்படுத்தும் கவிதை பாஞ்சாலிக்கு சேலை கொடுக்க கண்ணன் இருந்ததையும், சுக்ரீவன் விசயத்தில் வாலியைக் கொன்ற இராமனையும் நினைவுப்படுத்தி இன்றைய நீதியினை கேள்விக்கு உட்படுத்துவதும் முக்கியமானதாகிறது.

சினம் தணியாத கவிஞர் மேலும் இந்த நீசக்காரர்களின் குலைநடுங்க, வன்மம் தீர்க்க வேறு வழியில்லை மகளே. உன் தகப்பனின் வலியுடன் சொல்கிறேன் இந்த தேசத்துப் பெண்கள் பூலான்தேவிகளாய் மாறுவதைத் தவிர வேறு வழியில்லை. என்பதாய் புரட்சிகர விதையைத் தூவுவதோடு பூலான்தேவியை உருவாக்கியதும் இந்தச் சமூகம்தான் என்பதை அடையாளம் காட்டுகின்றார். கவிஞர் ந. நாகராஜனின் கவிதைகளில் பெரிதும் சமூக அக்கறையும், சமூகக் கோபமும் பரவிக்கிடப்பதைக் காணமுடிகிறது.

இவரது முதல் கவிதை நூல் குறித்து பேசும் கவிஞர் ஹெச். ஜி. ரசூல், நாகராஜனின் படைப்பின் தனித்த ஆளுமை என்பதே பன் முகத்தளத்தில் படர்ந்து செல்லும் ஆற்றல் மிக்க கவிதை மொழியை அவர் கையாளுவது தான். பண்பாட்டிற்கும் சூழலுக்கும் ஏற்ப வாசிக்கவாசிக்க அர்த்தங்களைப் பெருக்கிக் கொள்கின்ற கவிதை மொழி அவருக்குக் கைகூடி வந்திருக்கிறது. எதையும் உரத்துப் பேசாமல் நடப்பியல் சார்ந்த குறியீட்டுத் தன்மையோடு அர்த்தங்களைப் புலப்படுத்தும் அழகியலை இவரது கவிதைகளில் கண்டடையலாம் (சித்திரம் வரைந்த குழந்தை - முன்னுரை) என்பது நினைவில் கொள்ளத்தக்கது. மேலும்,

**பதில் இருக்கும் கேள்விகளுக்கும்**
**பலநேரங்களில்**
**பதில்களை சொல்லிவிட முடிவதில்லை.**
**பதில்களை கட்டாயமாக்காதீர்கள்.**
**என்ன பலன்**
**கேள்விகளாலும்**
**பதில்களாலும்?**
**எப்போதும்**
**கடந்துபோவதுதான் உத்தமம்**

**(கா. ந. மணல் – 21)**

என்று முடியும் இக்கவிதை வாழ்வில் பல நேரங்களில் விடை தேடிமுட்டிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு வாழ்வை கடந்து போவதே உத்தமம் என்பதாய் அறிவுறுத்துகிறது. இது வாழ்வியலின் நடப்பியல் குறித்த ஞானத்தை, வாழ்வியல் குறித்த புரிதலை, அனுபவத்தை முன்மொழிவதாய் விளங்குகின்றது.

ஆலைச்சங்கின் ஒலிஅபயமா? அபாயமா?, எந்தப் பாட்டி சுட்டாலும் வடை கிடைப்ப தென்னமோ நரிகளுக்குதான், ஆற்றுநீரில் கால்பதித்தால் அடியில் நழுவுகிறது மணல் எனும் பல முத்தாய்ப்பான குறுங்கவிதைகளும் சிந்தனையைத் தூண்டுவதாய் அமைகின்றன. இறுதிக் கவிதையை மையப்படுத்தியே காலடியில் நழுகிறது மணல் என்பதாக தொகுப்புக்கான தலைப்பை சுட்டியிருப்பதும் இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது. அன்று நீரோட்டம் மிகுந்த ஆற்றில் குளித்த போது காலடியில் மணல் நழுவியது என்னமோ உண்மைதான். இன்றோ வைகை போன்ற பேராற்றுப் படுகைகளில் பல சூழலியல் சார் போராளிகளின் கண்களை மீறிபொக்லைன் மூலம் டிப்பர்லாரிகளின் ஏற்றப்பட்ட மணல்கள் காவல் அதிகாரிகளின் ஊடாக ஊடுருவுவதும் நினைக்கத்தக்கதாகிறது. ஒவ்வொரு கவிதையும் நடப்பியல் வாழ்வை அதன் சிக்கலை, கொண்டாட்டங்களை அடர்த்தியும் நுட்பமும் நிறைந்த கவிதை மொழியில் முன் வைத்துள்ளன. இவையே நாகராஜனின் கவிதைக்கான சிறப்பாகவும் அமைகிறது.